# 5 முரண்பாடுகளுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்போம்

தனிநபர் வேறுபாடு காரணமாகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மனிதர்களுக்கிடையில் சிந்திக்கும் முறையில் வேறுபாடு ஏற்படுவதுண்டு. இதனால் பல்வேறு கருத்து பேதங்கள், கருத்துக்களில் இணக்கப்பாடின்மை ஏற்பட்டு முரண்பாடு தோன்றும். இவ்வாறான முரண்பாட்டுச் சந்தர்ப்பங்களை நம் முன்னோரும் முகம் கொடுத்துள்ளார்கள். இன்றும் அவ்வாறான முரண்பாடுகள் இருக்கின்றன. எதிர்காலத்திலும் முரண்பாடுகள் ஏற்படலாம். நாம் முகம் கொடுக்கும் பல்வேறு முரண்பாடுகளை ஆக்கபூர்வமாகத் தீர்த்துக் கொள்வதே முக்கிய விடயமாகும். முரண்பாடொன்றைத் தீர்த்துக் கொள்ளல் சமூக முன்னேற்றத்திற்குக் காரணமாக அமையும். மனிதர்கள் குழுக்களாக சமூகமயமாகும்போது கட்டாயமாக முரண்பாடுகளைத்தீர்த்துக்கொள்ளும் ஆற்றல்களைப் பெற்றுக்கொள்ளல் அவசியமாகும். முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ள அவசியமான நிபுணத்துவத்தை இப்பாடத்தைக் கற்பதன்மூலம் நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள்.

## 5.1 முரண்பாட்டுக்கான காரணங்களை இனங்காண்போம்

இப்படத்தைப் பாருங்கள். உங்களுக்கு என்ன தென்படுகின்றது? சஞ்சிகை ஒன்றில் பிரசுரமாகி இருந்த படத்தைக் கண்ட பிரதாபன் மற்றும் தருமன் எனும் இருவர்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்துபேதம் மோதல் நிலைவரை சென்றது. ஓய்வு பெற்ற அதிபரான தருமனின் பாட்டன் இச் சந்தர்ப்பத்தில் தலையிட்டு அவர்கள் இருவருக்கும் விடயத்தைத் தெளிவுபடுத்தினார்.



உரு 5.1

**தருமன்** :- தாத்தா , இந்தப் படத்தில் இருப்பது ஒரு பூச்சாடிதானே?

**பிரதாபன்** :- இல்லை, இல்லை இரண்டு முகங்கள்தானே தாத்தா?

**தருமன்** :- இல்லை, பூச்சாடிதானே தாத்தா?

**பிரதாபன்** :- தாத்தா, முகங்கள் இரண்டுதானே?

**தாத்தா** :- சரி, சரி எதற்கு இருவரும் தர்க்கம் புரிகிறீர்கள்?

பிரதாபன் சொல்வதும் சரி, தருமன் சொல்வதும் சரி. இருவருக்கும் படம் தோன்றும் முறைதான் வித்தியாசம். மனிதர்கள் வித்தியாசமானவர்கள் என்கிறார்கள். பிரதாபனுக்கு படத்தில் பூச்சாடி ஒன்று தோன்றுகின்றது. தருமனுக்கு முகங்கள் இரண்டு தோன்றுகின்றன. எனவே மனிதர்களுக்குள் உள்ள இந்த வித்தியாசத்தைப் புரிந்து கொண்டால் முரண்பாடுகள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

மேலுள்ள சம்பவத்தில் கவனம் செலுத்துங்கள். வாழ்க்கையில் நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறுபட்ட மனிதர்களோடு பல்வேறுபட்ட கருத்துக்களில் முரண்படுகின்றோம். பிரச்சினை, சண்டை, கருத்துபேதம், வாய்த்தர்க்கம், அடிதடி, யுத்தம் போன்ற பல்வேறு சொற்களின் அர்த்தத்தை கொண்ட முரண்பாட்டு அனுபவங்களை நமக்குப் புதியவை அல்ல. வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொருவரும் பல்வேறு முரண் பாடுகளை எதிர்கொள்கிறார்கள். தமக்குள்ளேயும், தமக்கும் நண்பர்களுக் கிடையிலும், அயலவர்களுக்கிடையிலும் சகோதர சகோதரிகளுக்கிடையிலும் கூட முரண்பாடுகள் ஏற்படலாம். அதே போன்று அரசியல் குழுக்களுக்கிடையே, சமயக் குழுக்களுக்கிடையே, இனங்களுக்கிடையே மற்றும் மனித சமூகங்களுக்கிடையே முரண்பாடுகள் ஏற்படுகின்றன. இதன்படி முரண்பாடு வாழ்க்கையின் யதார்த்தம் ஆகும். ஏனெனில் மனிதன் எங்குள்ளானோ முரண்பாடும் அங்கு இருக்கும். வரலாறு முழுவதும் மனிதர்களுக்கிடையில் அடிக்கடி ஏற்பட்ட முரண்பாடுகள் சம்பந்தமான தகவல்களைக் காணலாம். அதேபோன்று மோதல்களை வெற்றிகரமாக எதிர்கொண்டோரைப் பற்றியும் நீங்கள் அறிந்து இருப்பீர்கள். தனிநபரோ அல்லது மனிதக் குழுக்களோ சிந்திக்கும்முறை வேறுபடுவதே முரண்பாடுகளுக்குக் காரணமாகும். அதேபோன்று மனிதர்களுக்கிடையில் பெரும்பாலான கசப்பான சம்பவங்கள் ஏற்படக் காரணம் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்படும் கருத்து பேதங்களை, பிரச்சினைகளைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ளத் தவறுவதே ஆகும்.

முரண்பாடொன்றை ஆரம்பத்திலேயே தீர்த்துக் கொள்ளாவிட்டால், அது படிப்படியாக தீர்த்துக் கொள்ள முடியாத பாரிய பிரச்சினையாக உருமாறும். சில சந்தர்ப்பங்களில் அதனால் சொத்துக்கள் சேதமடைதல், உயிரிழப்புக்கள் கூட ஏற்படலாம். எனவே நாம் முரண்பாடுகள் ஏற்படுவதை முற்கூட்டியே தவிர்த்துக் கொள்ள முயலவேண்டும். முரண்பாடு ஒன்று ஏற்பட்டுவிட்டால் அதனைச் சுமூகமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும். முரண்பாடொன்றைச் சுமூகமாகத் தீர்த்துக் கொள்வதற்கு அதனை ஆரம்பத்திலேயே ஆக்கபூர்வமாகக் கையாளவேண்டும்.

இங்கு தரம் 8 இல் நீங்கள் கற்ற ‘‘முரண்பாட்டினைத் தவிர்த்துக் கொள்வோம்’’ எனும் பாடத்தில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் உங்களுக்குப் பயன்படும்.


இலவச பாடநூல் விநியோகத்திற்காக

**முரண்பாடென்பது தனியொரு நபருக்குள்ளோ அல்லது நபர்களுக்கிடையிலோ அல்லது இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட குழுக்களுக்கிடையிலோ ஏற்படும் கருத்து பேதத்தின் பெறுபேறாகத் தோன்றிய பிரச்சினை சூழ்ந்த நிலைமையாகும்.**

## 5.2 முரண்பாடுகளின் இயல்புகளை இனங்காண்போம்

நபர் ஒருவரின் மனதில் தம் தேவை ஒன்று அல்லது ஆசையொன்று நிறைவேறாது போனமையால் ஏற்பட்ட ஏமாற்றமே பெரும்பாலும் முரண்பாட்டின் ஆரம்பமாகும். மேலும் தமக்குக் கிடைக்கவேண்டிய இடம் கிடைக்காமை, தம் கௌரவத்திற்குப் பங்கமேற்படல் என்பனவும் முரண்பாட்டிற்குக் காரணமாயிருக்கலாம். தாம் எதிர்பார்க்கும் நிலைக்கும் தற்போதுள்ள நிலைக்குமிடையிலான இடைவெளி அதிகரித்துச் செல்ல பல பிரச்சினைகள் தோன்றும் அது மோதல்வரை சென்றடையலாம்.

முரண்பாடு என்பது அடிப்படையில் நல்லதென்றோ தீயதென்றோ கூறமுடியாது. அதன் நன்மை, தீமை இரு தரப்பும் அதைக் கையாளும் முறையிலேயே உள்ளது. முரண்பாட்டினைக் கையாளும் முறைக்கேற்ப அது ஆக்கபூர்வமானதாகவோ அல்லது அழிவானதாகவோ அமையலாம்.

### முரண்பாடொன்று விளைதிறன்மிக்கதாகக் கூடிய சந்தர்ப்பங்கள்

பின்வரும் சந்தர்ப்பங்கள் நிறைவேறினால் முரண்பாடொன்று விளைதிறன் மிக்கதாக அமையும்.

* முரண்பாட்டின் மூலம் முக்கிய விடயம் பகிரங்கப்படுத்தப்படல்.
* புதிய சந்தர்ப்பமொன்று உருவாக்கப்பட்டு உண்மையான பிரச்சினை வெளிப்படல்
* குறைபாடுகளை இனங்கண்டு அவற்றைக் கட்டுப்படுத்திக்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்குமாயிருத்தல்.
* இரு தரப்பும் இணங்கக்கூடிய வெற்றிகரமான தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள முடியுமாயிருத்தல்.
* நட்புறவு புதுப்பிக்கப்பட்டு இருபகுதியினரிடையேயும் புரிந்துணர்வு மேலும் வளர்ச்சி அடைதல்.

### முரண்பாடொன்று அழிவை ஏற்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள்

பின்வரும் சந்தர்ப்பங்களின்போது முரண்பாடொன்று அழிவு நிலைக்கு இட்டுச் செல்லலாம்.

* தூரநோக்கின்றித் தீர்மானம் எடுத்தல்
* மறுதரப்பினரை அச்சுறுத்தல், தாக்குதல், இழிவுபடுத்தல்

* சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல்
* சவால் விடல்
* தொடர்புகளை முறித்துக்கொள்ளல்

முரண்பாடுகளை ஆக்கபூர்வமாகத் தீர்த்துக்கொள்ள முடியுமாயின் உண்மையிலேயே அம் முரண்பாடுகள் சிறந்த விளைதிறனை ஏற்படுத்தும்.

எனவே முரண்பாடுகளை விளைதிறனாகக் கையாளும் முறைகளை நாம் கற்றுக்கொள்ள வேண்டியதோடு மனிதன் சமூகமயமாகும்போது கட்டாயமாக முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ளும் திறன்களையும் ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும். விசேடமாக குழுச்செயற்பாடுகளின்போது முரண்பாடு தீர்க்கும் திறன் அவசியமாகும். பிறர் கருத்துக்களைப் பொறுத்துக் கொள்ளல், பிறருக்குச் செவிமடுத்தல், தேவையேற்படும்போது தம் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளல், நெகிழ்ச்சித்தன்மை ஆகிய பண்புகள் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு அவசியமாகும். மேலும் முரண்பாடுகளை தீர்க்கும் ஆற்றல் சிறந்த தலைமைத்துவப் பண்புமாகும்.

**செயற்பாடு I**

நீங்கள் முகம் கொடுத்த முரண்பாடொன்றை ஞாபகப்படுத்துங்கள். அப்போது நீங்கள் நடந்து கொண்ட முறையைப்பற்றி இப்போது என்ன நினைக்கிறீர்கள். அம் முரண்பாடு இப்போது ஏற்படுமாயின் நீங்கள் எவ்வாறு முகம் கொடுப்பீர்கள் எனச் சிந்தித்துப் பாருங்கள்.

## 5.3 முரண்பாட்டை தீர்க்க உதவும் உத்திகள்

பல்வேறு சந்தர்ப்பங்களில் நாம் பல்வேறு முரண்பாடுகளுக்கு முகம் கொடுக்கிறோம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் உரியவாறு அறிவுபூர்வமாக பிரதிபலிப்பைக் காட்டாதபோது விளைவுகள் அழிவு தரக்கூடியதாக இருக்கும். முரண்பாடுகளின்போது சிலர் கடும் சினம் கொண்டு பிறரைத் தாக்குவதுண்டு. ஆயுதங்களைப் பயன்படுத்தி நாசகார நிலைமையை ஏற்படுத்துவதுண்டு. முரண்பாடு ஏற்படும்போது அதனோடு சம்பந்தப்பட்ட சகல தரப்பினருள்ளும் எழும் உளரீதியான பாதிப்பு மிக வலிமையானது. தம் எண்ணங்கள் தமக்குக் கட்டுப்படாததை உணர்வர். சுய அடக்கம், சுயகட்டுப்பாடு பலவீனமடைவதால் முரண்பாட்டு நிலைமை உருவாகின்றது. அவ்வாறானதொரு சந்தர்ப்பத்திற்கு நீங்கள் முகம் கொடுத்தால் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதைச் சிந்தியுங்கள்.

யுத்தம் ஏற்படுவது மனித மனங்களினுள்ளே ஆகும். ஆகையால் சமாதான வேலி கட்டவேண்டியது மனித மனங்களுக்குள்ளேயே. - யுனெஸ்கோ யாப்பு -

மோதலொன்றை ஆக்கபூர்வமாகத் தீர்த்துக் கொள்ள உதவும் பின்வரும் உத்திகள் பற்றிக் கவனம் செலுத்துங்கள்.

## ♦ பேச்சுக்கு எதிர்ப் பேச்சைத் தவிர்த்தல்

முரண்பாட்டுச் சந்தர்ப்பங்களில் பேச்சுக்கு எதிர்ப்பேச்சுப் பேசுவது பொருத்தமன்று. இது எதிர்த் தரப்பினரை மேலும் கோபமூட்டலாம். ''அடித்தால் அடிப்பேன் ஏசினால் ஏசுவேன்'' எனும் நிலைப்பாடு இழிவானதாகும். மேலும் இது தனிநபர் ஆளுமையைப் பலவீனப்படுத்தும். பேச்சுக்கு எதிர்ப்பேச்சு பேசும்போது உள்ளம் குழப்பமடையும். நன்மை எது? தீமை எது? பொருத்தமானது எது? பொருத்தமற்றது எது என மறந்து போகும். இயற்கையிலே மனிதன் தோல்வியை விரும்புவதில்லை. இதனால் முரண்பாடு உக்கிரமடையலாம்.

## ♦ விடயத்தைப் புரிந்து கொள்ளுங்கள்

உங்களோடு முரண்பட்டுள்ள எதிராளி என்ன கூறுகின்றான்? அவர் ஏன் கோபப்படுகிறார்? அவர் உங்களுக்கு என்ன சொல்ல எத்தனிக்கிறார்? போன்ற விடயங்களை முரண்பாட்டின்போது புரிந்து கொள்ள முயலுங்கள். முரண்பாட்டினூடாக அவர் பிரதானமாகச் சொல்வது ''என் பிரச்சினைக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர் நீரே. நான் இருக்கும் நிலை இதுதான்'' எனும் செய்தியே ஆகும். தத்தமது கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை சகலருக்கும் உண்டு. எதிராளியின் கூற்றுக்கு செவிமடுப்பதால் நீங்கள் இழிவடையமாட்டீர்கள். நீங்கள் அந்த குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதாகமாட்டாது. எனவே முரண்பாட்டின்போது அவதானமாக செவிமடுத்து வெளிக்காட்டப்படும் செய்தியை புரிந்து கொள்வது மிகவும் முக்கியமாகும். இதனூடாக முரண்பாட்டுக்கு வழிசெய்யும் செய்தியைச் சரியாகப் புரிந்து கொண்டு சரியான தீர்மானத்தை எடுப்பது உங்களுக்கு இலகுவாகிவிடும். சரியான தீர்வு முரண்பாட்டு தவிர்ப்பிற்குப் பேருதவியாகும்.

## ♦ தர்க்கம் செய்யாதீர்கள்

முரண்பாடொன்று உச்ச நிலையை அடைவது தர்க்கிப்பதனாலேயே. தர்க்கிப்பது சில சந்தர்ப்பங்களில் உசிதமாக இருப்பினும் சில சமயங்களில் முரண்பாட்டினை விருத்திசெய்ய வழிவகுக்கும். எவரேனும் ஒருவர் உணர்வு மேலீட்டால் பேசும்போது அவருடன் தர்க்கித்து விடயத்தைத் தெளிவுபடுத்த முற்படுவது பயனற்றது. ஏனெனில் உணர்ச்சிவசப்பட்ட உள்ளத்தில் அறிவுக்கு இடமில்லை. முதலில் செய்யவேண்டியது எதிராளியின் மனவெழுச்சி வேகம் தணியும்வரை பொறுத்து இருப்பதேயாகும். இதனூடாகப் பெரும்பாலான கசப்பான நிலைமைகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும். முரண்பாட்டு நிலைமையை விட்டு விலகிச் செல்லல் தனிநபர் ஆளுமைக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

முரண்பாட்டில் இவ்விடயம் அதிமுக்கியமானது. நீங்கள் எதிர்த்தரப்பினரின் கருத்துக்களைக் கவனமாக, ஊக்கத்தோடு, விளக்கத்தோடு செவிமடுப்பதை உறுதிப்படுத்தும் வகையில் நடந்து கொள்ளுங்கள். இங்கு எதிர்த்தரப்பினர் சொல்லும் விடயங்கள் உண்மையா, பொய்யா என்பதை முன்கூட்டியே தீர்மானிக்காது, தற்காலிகமாகத் தீர்மானம் எடுப்பதை நிறுத்திவிட்டு கவனமாகச் செவிமடுங்கள். உங்கள் தன்னடக்கத்தை வெளிக்காட்டுங்கள். இதன்போது நாம் பேசும் பாங்கு மற்றும் பயன்படுத்தும் வசனங்கள் பெரும்பாலும் முக்கியமாகும். முரண்பாட்டின்போது மென்மையாகவும் கவர்ச்சியாகவும் பேசுவதற்கு இயலுமானவரை முயலுங்கள். ஏற்றுக்கொள்ளாத கருத்துக்கள் சம்பந்தமாக உங்கள் கருத்துக்களைத் தெளிவாக அமைதியாக சமர்ப்பியுங்கள். இதன் போது நாம் நல்ல சொற்பிரயோகங்களைக் கையாள வேண்டும்.

**பின்வரும் வாக்கியங்களைப் பாருங்கள்.**

''நீங்கள் கூறுவது எனக்குப் புரிகிறது''

''ஆம் உங்கள் பொறுமை எல்லை மீறிச் சென்றிருப்பது தெரிகிறது என்றாலும் நாம் பார்ப்போம்''

''வேறுவிதமாகச் சொல்வதானால் நீங்கள் சொல்வது............''

''இந்த சம்பவம் காரணமாக நீங்கள் எந்தளவு அதிர்ச்சியும் மனவேதனையும் அடைந்துள்ளீர்கள் என்பதை நானும் உணருகிறேன்''

முரண்பாட்டின்போது இவ்வாறான சொற்களைப் பிரயோகித்து, எதிர்த்தரப்பினருக்கு செவிமடுத்து இணங்கக்கூடிய நியாயமான தீர்வுக்கு வர முயல வேண்டும்.

இணங்கக்கூடிய சகல சந்தர்ப்பங்களிலும் இணங்குங்கள். முரண்பாட்டுக்கு அடிப்படையான காரணத்தை விபரிக்கும்போது பல்வேறு வழிகள் உங்களுக்குத் தெரியவரும். இச் சந்தர்ப்பங்களில் நீங்கள் எதிர்த்தரப்பினரோடு இணங்க முடியுமான இடங்களில் இணங்குங்கள். அப்போது எதிர்த் தரப்பினர் உங்களது நேர்மையை, முரண்பாட்டைத் தவிர்த்துக்கொள்ள நீங்கள் கொண்டுள்ள ஈடுபாட்டைப் புரிந்து கொள்வார். அப்போது அவர் கடுமையான தீர்மானங்களை எடுக்கமாட்டார். இதன்போது இணக்கத்தைத் தெரிவிக்கக் கூடிய சொற் பிரயோகங்கள் எவை?

''நீங்கள் இவ்விடத்தில் சரி''

''ஆ..... அந்த விடயத்தை நானும் ஏற்றுக் கொள்கின்றேன்''

''நானும் உன்னுடன் இணங்குகின்றேன்''

''இவ்விடத்தில் அது பற்றி நம் இருவருக்கிடையில் எதுவித பிரச்சினையும் இல்லை''

## மென்மையாக கலந்துரையாடலை ஆரம்பியுங்கள்

முரண்பாட்டின்போது எதிர்த்தரப்பினருக்கு கருத்துகூற இடம் வழங்கி உணர்ச்சி வேகத்தைக் கட்டுப்படுத்திய பின்னர் மென்மையாகக் கலந்துரையாடலை ஆரம்பியுங்கள். அவர் பேச்சை அவதானத்தோடு செவிமடுங்கள். தேவையான இடங்களில் மரியாதையாக வருத்தத்தைத் தெரிவியுங்கள். இதற்குப் பின்வரும் சொற்பிரயோகங்கள் உங்களுக்கு உதவும்.

"நாம் இந்தப் பிரச்சினை ஆரம்பமான முறை பற்றித் புரிந்து கொள்ள முயல்வோம்"
"நீங்கள் இத்தகவல்களை எவ்வாறு பெற்றுக்கொண்டீர்கள்?"
'நீங்கள் இத்தீர்மானத்திற்கு எவ்வாறு வந்தீர்கள்?"

## கலந்துரையாடல் மூலம் தீர்வு காணுங்கள்

ஆவேசமான, வார்த்தைகளை மகிழ்ச்சியான கலந்துரையாடலாக மாற்றிக் கொள்ளுங்கள். எதிர்த்தரப்பினரோடு பிரச்சினையை தீர்ப்பதற்கு கலந்துரையாடுபவராக உங்களை நீங்கள் ஆக்கிக் கொள்ளுங்கள். இயலுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவரது கருத்துக்களின் அடிப்படையில் செயற்படுபவராக காட்டிக் கொள்ளுங்கள். உங்களுக்கு பின்வரும் சொற்பிரயோகங்கள் உதவும்.

"இப்போது நான் என்ன செய்ய வேண்டும்"
"உங்கள் ஆலோசனை என்ன"?

இவ்வாறு பிரச்சினைக்குரிய தீர்வைக் கட்டம் கட்டமாக இனங்காணுங்கள். இனங்கண்ட தீர்வையும் அதை நடைமுறைப்படுத்த வேண்டிய முறையையும் இரு தரப்பும் இணைந்து திட்டமிடுங்கள்.ஒத்துழைப்போடு இருதரப்பும் இணங்கக்கூடிய தீர்வுக்கு வரமுயலுங்கள்.இங்கு நீங்கள் தரம் 8இல் கற்றுக்கொண்டவாறு வெற்றி - வெற்றி தீர்வுக்கு வர முயலுங்கள். (இரு தரப்பும் வெற்றி பெறல்) அதன்படி நடந்து கொள்ளுங்கள். முரண்பாடொன்று தீர்க்கப்படும்போது அல்லது தவிர்க்கப்படும்போது ஏற்படும் நிம்மதியை, ஆறுதலை அனுபவித்துப் பாருங்கள்.

## 5:4 ஆக்கபூர்வமான முறையில் பிரச்சினை தீர்த்தல்

பின்வரும் பத்திரிகை செய்திகளில் கவனம் செலுத்துங்கள்

பஸ்வண்டியில் ஆசனத்திற்காக இருவருக்கிடையில் ஏற்பட்ட சொற் பிரயோகம் அடிதடியாக மாறியது.

பரம்பரை பரம்பரையாக இருந்து வந்த காணித்தகராறை தீர்த்துக் கொண்ட சகோதரர்கள் இருவரும் இணைந்து அக்காணியை கோவிலுக்கு அன்பளிப்புச் செய்தார்கள்.

மேலுள்ள பத்திரிகைச் செய்தியில் இரண்டு முரண்பாட்டுச் சம்பவங்கள் இரு வேறு விதமாக தீர்த்துக் கொள்ளப்பட்ட முறை காணப்படுகின்றது. பஸ்வண்டியில் ஆசனத்திற்காக முரண்பட்டு வார்த்தைகளை பரிமாறிக்கொண்ட இருவர் இறுதியில் அதை அடிதடிவரை எடுத்துச் சென்றது. முதலாவது சம்பவமாகும். ஒருவரையொருவர் தாக்குவதற்குப் பதிலாக பிரச்சினையை தீர்த்துக் கொள்ள பயன்படுத்தக்கூடிய உத்திகள் என்ன? முரண்பாட்டை தவிர்க்க எவ்வாறு செயற்படல் வேண்டும்? இவ்வாறான விடயங்களில் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

இரண்டாவது சம்பவத்தில் இரண்டு குடும்பங்களுக்கிடையில் காலங்காலமாக இருந்து வந்த காணித் தகராறு தீர்க்கப்பட்ட முறை கூறப்படுகிறது. முரண்பாட்டினை சமாதானமாக தீர்த்துக்கொண்ட அவர்கள் பின்னர் பரம்பரை பரம்பரையாக கோபமாக இருப்பதற்கு காரணமாக இருந்த காணியை கோவிலுக்கு அன்பளிப்பு செய்து விட்டார்கள். குடும்பங்களுக்கு இடையில் இதுவரை காலமும் தடைப்பட்டிருந்த தொடர்புகள் மீள புதுப்பிக்கப்பட்டன. இதனால் குடும்பங்களுக்கிடையில் சமாதானமும் நட்பும் உறுதிப்படுத்தப்பட்டது.

**செயற்பாடு - II**

**பின்வரும் சம்பவத்தை நன்கு வாசியுங்கள்.**

கடந்த திங்கட்கிழமை களுத்துறை கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கற் போட்டி நடைபெற்றது. முதல் சுற்றிலேயே தோல்வியடைந்த கணபதி மகாவித்தியாலய விளையாட்டு வீரர்கள் விளையாட்டு மைதானத்தில் மரநிழலில் அமர்ந்தவாறு போட்டியைக் கண்டுகளித்தனர். கலைமகள் மகாவித்தியாலய பல சுற்றுக்களில் வெற்றி பெற்றது. அக்குழுவில் மிகத் திறமையாக விளையாடிய முரளி எனும் விளையாட்டு வீரன் பந்தை அடிக்க பயன்படுத்திய மட்டையில் கணபதி மகாவித்தியாலயத்தின் சின்னம் இருந்தது. கலைமகள் விளையாட்டு வீரன் தங்களது மட்டையை திருடியதாகவே கணபதி விளையாட்டு வீரர்கள் நினைத்தார்கள். குழப்பமடைந்த அவர்கள் விளையாட்டுப் போட்டியை நடாத்திக்கொண்டு இருந்த அலுவலகத்திற்கு சென்று முறைப்பாடு செய்ததோடு பிரச்சினையை தீர்ப்பதற்கு கடுமையான சொற்களை பயன்படுத்த ஆயத்தமானார்கள். மாணவர்களை அமைதிப்படுத்திய விளையாட்டுப் பொறுப்பு அதிகாரி விடயத்தை ஆராய்ந்து பார்த்தபோது கணபதி மகாவித்தியாலய விளையாட்டு வீரர் ஒருவர் தன் சிறந்த நண்பனான கலைமகள் மகாவித்தியாலய விளையாட்டு வீரரான முரளிக்கு தம் மட்டையை வழங்கியிருப்பது தெரிய வந்தது.

இச்சம்பவத்தை வாசிக்கும் போது உங்களுக்கு விளங்கிய வகையில்.

* முரண்பாடொன்று ஏற்பட வாய்ப்பு இருந்ததா?
* முரண்பாடு எவ்வாறு தவிர்க்கப்பட்டது?
* முரளிக்கு மட்டைடைய வழங்கிய நண்பன் நீங்களாக இருப்பின் உங்கள் உணர்வுகள் எவ்வாறு இருக்கும் என்பதை விபரிக்க.
* உண்மையிலேயே கணபதி மகாவித்தியாலயத்தின் மட்டையை முரளி திருடி இருந்தால் கணபதி மகாவித்தியாலய விளையாட்டு வீரரான உங்களுக்கு எவ்வகை உணர்வுகள் ஏற்பட்டு இருக்கும்? நீங்கள் இதன்போது எவ்வாறு செயற்படுவீர்கள்?

## 5.5 முரண்பாட்டை தீர்த்துவைக்க இணக்கப்பாட்டைப் பயன்படுத்துவோம்


பாடசாலை விட்டு வீடு வந்த கார்த்திகா ‘‘அம்மா, இன்று மாலாவும், பிரேமாவும் நூல் நிலையத்தில் புத்தகத்திற்காகச் சண்டை போட்டார்கள். இருவரும் என் நண்பிகள் ஆகையினால் அது பற்றி என்னிடம் கூறினார்கள். நான் இருவருக்கும் புத்தகத்தை வாசிக்கக்கூடிய முறையொன்றைக் கண்டு பிடிக்க உதவினேன்’’ என்று கூறினாள்.

அதைக்கேட்ட கார்த்திகாவின் தாய் ''மிகவும் சிறந்தது மகள் மாலாவினதும், பிரேமாவினதும் முரண்பாட்டைத் தீர்த்து வைக்க இணக்கப்பாட்டை பயன்படுத்தி இருக்கிறாய்'' என்றார்.

**மேற்குறிப்பிட்ட சம்பவத்தில் வரும் இணக்கப்பாடு என்றால் என்ன என பார்ப்போம்.**

இணக்கப்பாடு என்பது இரு தரப்புக்கு மத்தியில் ஏற்படும் முரண்பாடொன்றை அல்லது கருத்துப் பேதமொன்றைத் தீர்த்து வைப்பதற்கு இணக்கப் பாட்டாளராக ஒருவரோ அல்லது குழுவொன்றோ தலையிட்டு இருதரப் பையும் கலந்துரையாடச் செய்தல் ஆகும். அதாவது இணக்கப்பாடு என்பது முரண்பாட்டுக்கான இறுதித் தீர்ப்பாக இருக்காது. ஆனால் இறுதி தீர்ப்பை எட்ட எடுக்கும் முயற்சி ஆகும்.

வெற்றி தோல்வியை ஒரு தரப்புக்கு மட்டும் உரிமையாக்க முடியாத சந்தர்ப்பங்களிலேயே இணக்கப்பாடு மிகவும் பொருத்தமாக அமையும். இணக்கப்பாட்டின்போது தலையிடும் நபர் இணக்கப்பாட்டாளர் எனப்படுவர்.



## இணக்கப்பாட்டாளர் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள்


* இணக்கப்பாட்டாளர் ஒரு நீதிபதியல்ல. முரண்பாட்டோடு சம்பந்தப்பட்ட இருதரப்பினரதும் நண்பராக இருத்தல் வேண்டும்.
* குற்றவாளி யார் என்பதைத் தீர்மானிப்பதைவிடுத்து இருதரப்பும் முரண்பாட்டைத் தீர்த்துக் கொள்ள உதவுதல்.
* பக்கச் சார்பின்றிச் செயற்படல்.
* இரு தரப்பையும் வெற்றி பெறச் செய்தல்.
* பொறுமையாகச் செவிமடுப்பவராக இருத்தல்.
* முரண்பாட்டை தீர்க்க உதவும் நேர்மையான எண்ணத்தோடு செயற்படல்.
* இணக்கப்பாட்டாளரின் கருத்தை ஏற்றுக்கொள்ளுமாறு முரண்பாட்டோடு சம்பந்தப்பட்ட இரு தரப்பையும் வற்புறுத்தாது இருத்தல்.
* நம்பகமாக நடந்து கொள்ளல்.
* தர்க்கரீதியாக விடயங்களை புரிந்து கொள்ளும் மற்றும் விடயங்களைப் புரிய வைக்கும் தொடர்பாடல் திறன் உள்ளவராக இருத்தல்.

### உங்கள் அறிவுக்கு

**"இணக்கப்பாடு"** என்பது புதிய ஒரு எண்ணக்கருவோ அனுபவமோ அல்ல. இராமாயணத்தில் இராமன் வனவாசம் சென்றதன் பின்னர் அரியணை ஏறுமாறு பரதனை அன்னை கைகேயி பணிக்க, அதனை மறுதலித்து பரதன் இராமனைத் தேடிச் சென்று அவனை முடிசூட்ட முனைந்த கதையை உங்கள் ஆசிரியரிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.


## இணக்கப்பாட்டை மேற்கொள்ளும் கட்டங்கள்

**முதற் கட்டம்**




இணக்கப்பாட்டாளர் முரண்பாட்டோடு சம்பந்தப்பட்ட குழுக்கள் இரண்டோடும் தனித்தனியாகக் கலந்துரையாடிக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வார். பிரச்சினையை அவர்களது கோணத்தில் புரிந்து கொள்ள முயல்வார். பின்னர், குழுக்கள் இரண்டுக்கும் கலந்துரையாடச் சந்தர்ப்பம் வழங்குவார். முரண்பாட்டோடு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இடையில் இணக்கப்பாடொன்று ஏற்படுமிடத்து அதற்கேற்ப எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் முரண்பாட்டைத் தீர்த்து வைப்பார்.

**இரண்டாம் கட்டம்**




உதாரணமாக கிராமிய மட்டத்தில் ஏற்படும் சிறு சிறு தகராறுகளை தீர்த்து வைக்க இணக்கசபை நடைமுறையில் உள்ளது.

இணக்கப்பாட்டுச் செயன்முறை நாடுகளுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்காகச் சர்வதேச ரீதியிலும் பயன்படுத்தக்கூடிய முறை ஒன்றாகும்.

**செயற்பாடு III**

ஜயந்திபுர மகா வித்தியாலய 9ம் தர மாணவர்களின் வருடாந்த சுற்றுலாவின் போது பார்வையிடப் பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்யும் பணியை ஆசிரியை மாணவர்களுக்கு முன்வைத்தார். ஒரு குழுவினர் கரையோரப் பிரதேசம் பொருத்தம் என முன்மொழிந்தார்கள். இன்னொரு குழுவினர் மலைநாட்டு பிரதேசத்தை முன்மொழிந்தார்கள். அப்போது ஏற்பட்ட முரண்பாட்டு நிலையைத் தீர்த்து வைக்க இணக்கப்பாட்டாளராக உங்களை நியமித்தால் நீங்கள் செயற்படும் முறையை இங்கு விளக்குங்கள்.

***சாராம்சம்***

* முரண்பாடென்பது சமூக யதார்த்தமாகும். மனிதன் இருக்கும் இடமெல்லாம் முரண்பாடுகளும் இருக்கும்.
* மனிதர்களுக்கு இடையில் தொடர்புகள், பிணைப்புக்கள் அதிகரிக்கும் அளவுக்கு முரண்பாடுகள் அதிகரிக்கும்.
* முரண்பாடுகளை விளைதிறனான முறையில் தீர்த்துக் கொள்வது அறிவுபூர்வமான செயற்பாடாகும். முரண்பாட்டினை விளைதிறனான முறையில் தீர்த்துக் கொள்வது சமூக முன்னேற்றத்திற்கு உதவும்.
* முரண்பாட்டுக்கான காரணங்களை இனங்கண்டு இரு தரப்பும் இணங்கக்கூடிய தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள நாம் முயல வேண்டும்.
* இணக்கப்பாடென்பது முரண்பாடொன்றை பக்கச் சார்பின்றித் தீர்த்துக் கொள்ள பயன்படுத்தக்கூடிய முறையொன்றாகும்.

**ஒப்படை**

சர்வதேச ரீதியாக முரண்பாட்டைத் தீர்த்து வைக்க இணக்கப்பாட்டு முறையைப் பயன்படுத்திய சந்தர்ப்பங்களை பற்றிய தகவல்கள் அடங்கிய பத்திரிகை அறிக்கைகளைச் சேகரித்து அத்தகவல்களை வகுப்பில் சமர்ப்பியுங்கள்.


இலவச பாடநூல் விநியோகத்திற்காக